தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 25-5-2015

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## சொக்கனூர் கிராமத்தில் வேளாண் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம்

நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாமின் (NSS) துவக்கவிழா 23-5-2015 அன்று மாலை 5.30 மணியளவில் சொக்கனூர் ஊராட்சியில் செல்வி. ச.ரா .அபர்ணா (நாட்டு நலப்பணித் திட்ட மாணவி) அவர்களின் வரவேற்புரையுடன் துவங்கியது. அடுத்ததாக நாட்டு நலப்பணித் திட்டம் பற்றி முனைவர் க. குமுதா (நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர்) அவர்கள் விளக்கவுரை ஆற்றினார்கள்.

வாழ்த்துரையாக திருமதி. மணி சிவமுருகேசன் (தலைவர், சொக்கனூர் ஊராட்சி) அவர்கள் பேசினார்கள். வேளாண் இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பக்கருவிகள் குறித்து செயல்விளக்கம் அளிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். தங்களுடைய ஊராட்சியின் சார்பாக அனைத்து முயற்சிகளுக்கும் முழு ஒத்துழைப்பு தருவதாகவும் அதற்காக வசதிகளை செய்து தருவதாகவும் கூறினார்.

அடுத்ததாக முனைவர் சி.திவாகர் துரைராஜ் (முதன்மையர், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோவை) அவர்கள் சிறப்புரை ஆற்றினார். NSS என்பது “இரு வழி பரிமாற்றம்” எனவும் பொதுமக்களும் மாணவர்களும் அதில் சிறப்புற பங்கேற்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

பின்னர், முனைவர் M.R. சீனிவாசன் (பேராசிரியர், பூச்சியியல்) அவர்கள் NSS மாணவர்கள் ஒருங்கிணைப்பு திறன்களை மேம்படுத்தும் சிறந்த ஒரு திட்டம் எனக் கூறினார். முனைவர் ச. மகிமைராஜா (முதன்மையர், வேளாண்மை) அவர்கள் தலைமையுரையாற்றினார். “இந்தியாவின் உயிர் கிராமங்களில் இருக்கிறது” என்னும் காந்தியடிகளின் கூற்றை நினைவுபடுத்தினார். இன்னும் சில வருடங்களில் இந்தியாவின் உணவு உற்பத்தி 450 மில்லியன் டன்களாக உயர்த்தப்பட வேண்டும். அதற்கு இளைய சமுதாயத்தினர் முழு அற்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். செல்வன். சுரேந்தர் (நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்) அவர்களின் நன்றியுரையுடன் துவக்கவிழாவானது இனிதே நிறைவுற்றது.

இரண்டாம் நாள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாமின் இரண்டாவது நாளன்று (24.05.2015) காலை 8.00 மணி முதல் 10 மணி வரை கோவில், பள்ளி வளாகம் மாணவர்களால் சுத்தம் செய்யப்பட்டது மற்றும் சாலையோரப்பகுதிகளில் பார்த்தீனிய செடிகள் அகற்றப்பட்டன. மாலை 4.00 மணியளவில் தொடங்கிய ‘‘சுற்றுச்சூழல் விழிப்புணர்வு’’ பேரணியானது சொக்கனூரிலிருந்து சட்டக்கல்புதூர், வீரப்பக்கவுண்டனூர் வழியாக சென்று இறுதியில் முத்துக்கவுண்டனூரில் முடிவுற்றது. மாலை 5.00 மணிக்கு சிறார் மற்றும் மகளிருக்கான விளையாட்டுப் போட்டிகள் (பலூன் உடைத்தல், லெமன் அண்டு ஸ்பூன், மியூசிக்கல் சேர் மற்றும் லக்கி கார்னர்) சொக்கனூரில் நடத்தப்பட்டது .

கருத்தரங்கமானது மாலை 6.00 மணிக்கு செல்வி த. கௌதமியின் (நாட்டு நலப்பணித் திட்ட மாணவி) வரவேற்புரையுடன் துவங்கியது. திரு. நடராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். ‘‘நுண்ணுயிர் பயன்பாடுகள்’’ குறித்தான தலைமை மற்றும் சிறப்புரையானது முனைவர். க.குமுதா, பேராசிரியர் (நுண்ணுயிரியல்) அவர்களால் வழங்கப்பட்டது. மேலும் ‘‘இன்றைய மாணவர்களுக்கான திறன் மேம்படுத்துதல்’’ என்ற தலைப்பில் முனைவர். ர. மகேஷ்பிரபு (NSS ஒருங்கிணைப்பாளர், காருண்யா பல்கலைக்கழகம்) அவர்கள் சிறப்புரை ஆற்றினார். நிறைவாக, விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள் வழங்கப்பட்டு, செல்வன் பி.கதிரவன் (நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்) அளித்த நன்றியுரையுடன் முடிவடைந்தது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்